DEREK PRINCE
MINISTRIES - INDIA

Free copy!

தேவனுடைய வார்த்தை உங்களுக்கு என்ன செய்யும்

- பகுதி ஒன்று

ஜீவன், உற்சாகம் அல்லது வழி நடத்துதலை உங்கள் வாழ்வில் கொடுக்க, தேவன் ஒரு வேத பகுதியை பயன்படுத்தின ஏதேனும் முக்கிய தருணத்தை யோசித்து பாருங்கள் நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தை இப்படி ஒரு விசித்திர தாக்கத்தை கொண்டு வருவது, வியப்பாய் இருக்கிறது, அல்லவா? நீங்கள் இப்போது வாசிக்க இருக்கும் கட்டுரையின் மையக்கருத்து அத்தாக்கத்தை குறித்து தான் - தேவனுடைய வார்த்தை உங்களுக்கு என்ன செய்யும்.

தேவனுடைய வார்த்தை உங்களுக்கு என்ன செய்யும் என்னும் 6 பகுதி உள்ள இம்மையக் கருத்தில், உங்களில் தேவனுடைய வார்த்தை எவைகளை உருவாக்கும் என்பதை குறித்து குறிப்பிட்ட கருத்துக்களை நாம் ஆராய இருக்கிறோம். தேவனுடைய வார்த்தைக்கு நீங்கள் உங்களை விட்டுக்கொடுக்கும் போது, என்ன விளைவுகளை நீங்கள் எதிர்பார்க்கலாம் என்பதை நாம் ஆலோசிப்போம்.

இந்த பாடத்தை நாம் ஆரம்பம் செய்ய இருக்கும் இந்நிலையிலேயே, நீங்கள் ஒரு எதிர்பார்ப்பின் மனநிலையுடன், இச்சத்தியங்களை பெற உங்கள் இருதயங்களை திறந்து கொடுங்கள் என்று உங்களை கேட்க விரும்புகிறேன். இப்போதனையிலிருந்து முன்னேற்றத்திற்குரிய, நல்ல காரியங்களை பெற்றுக் கொள்ள எதிர்பாருங்கள்.

THE TEACHING LEGACY OF DEREK PRINCE

DEREK PRINCE
MINISTRIES INDIA
www.derekprince.in
ISSUE #004

தேவனுடைய வார்த்தை ஜீவனுள்ளது

இப்போதனையில் தேவனுடைய வார்த்தையின் தன்மையை நாம் புரிந்துக்கொள்ள வேண்டிய முதல் காரியம், இது தான்: அது ஒப்பற்றது. நம் வாழ் நாட்களில் நமக்கு எதிர்ப்படக் கூடிய எந்த காரியத்திலிருந்தும் தேவனுடைய வார்த்தை மிகவும் வித்தியாசமானது. தேவனுடைய வார்த்தை வெள்ளைத்தாளில் அச்சிடப்பட்டிருக்கும் கருப்பு எழுத்துக்கள் அல்ல. அதை காட்டிலும், அது மேலான ஒன்று.

தேவனுடைய வார்த்தையின் உண்மையான தன்மையை கண்டறிய நாம் வேதாகமத்துக்கே தான் திரும்ப வேண்டும். தேவனுடைய வார்த்தையைக் குறித்த மிக சிறந்த தகவல், தேவனுடைய வார்த்தையிலேயே தான் உள்ளன.

இது உண்மையாய் இருக்க தேவனுடைய வார்த்தை தன்னையே குறித்து சொல்லும் சில காரியங்களை நான் உங்களுக்கு காண்பிக்க விரும்புகிறேன்.

சங்கீதம் 33:6ல் ஆரம்பம் செய்யலாம்:

கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால்,. அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது,

இந்த மொழிப்பெயர்ப்பில் "சுவாசம்" என்று கூறப்பட்டுள்ள இடத்தில் "ஆவி" என்கிற எபிரெய வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "ஆவி" மற்றும் "சுவாசம்" என்கிற வார்த்தைகளுக்குள் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் (தேவனுடைய ஆவி), வேதாகமத்தில் "சர்வ வல்லவரின் சுவாசம்" என்று அழைக்கப்படுகிறார்.

ஆனால் இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள இரண்டு முக்கிய உறுப்புகளைக் நாம் கவனிக்க வேண்டும். அவைகள் தேவனுடைய வார்த்தை மற்றும் தேவனுடைய ஆவியானவர்.

இவ்விரண்டு வல்லமையுள்ள காரியங்களாகிய தேவனுடைய வார்த்தை மற்றும் தேவனுடைய ஆவி - சிருஷ்டிக்கப்பட்ட முழு பிரபஞ்சத்தையும் உருவாக்கின. தேவனுடைய வார்த்தையினால் மற்றும் தேவனுடைய ஆவியினால், வானங்களும் அவைகளின் சர்வ சேனையும் உண்டாயின.

பிரபஞ்சத்தின் வல்லமை

தேவனுடைய ஆவியும், தேவனுடைய வார்த்தையும் எப்போதும் இணைந்தே செயலாற்றுகின்றன என்ற மிக முக்கிய கோட்பாட்டை நாம் புரிந்துக் கொள்ள வேண்டும். அவைகள் இசைந்து செயலாற்றுகின்றன. இதை வேதத்தின் ஆரம்பத்திலிருந்தே நாம் காண்கிறோம். ஆதியாகமம் 1:2ல் உள்ள வாக்கியம், இச்சத்தியத்தை உறுதி செய்கிறது: “தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்” அடுத்த வசனம், தேவனுடைய வார்த்தை பிறப்பிக்கப்பட்டதை குறித்து சொல்லுகிறது. சிருஷ்டிப்பின் ஆதியிலேயே, தேவனுடைய வார்த்தையும், ஆவியும் இணைந்து செயலாற்றுகிறதை காண்கிறோம். அவ்விதமாக, அவ்வல்லமைகள் இணைந்த போது, அதின் விளைவாக சிருஷ்டிப்பு உண்டானது. “வெளிச்சம் உண்டாகக்கடவது” என்று தேவன் சொன்னார், வெளிச்சம் உண்டாயிற்று.

முழு பிரபஞ்சத்தையும் உருவாக்கிய சிருஷ்டிக்கும் வல்லமையின் பின்னணியில், வார்த்தையும் தேவனுடைய ஆவியும் இணைந்து செயலாற்றுகின்றன என்பதை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். இது ஏன் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது? ஏனென்றால் நீங்கள் வார்த்தை மற்றும் தேவனுடைய ஆவியை உங்கள் வாழ்வில் பெறும்போது, தேவனுடைய முழு சிருஷ்டிக்கும் வல்லமையையும் நீங்கள் பெற்றுக்கொள்ளுகிறீர்கள். இவ்விரண்டும், உங்களுள் கலக்கும் போது, இம்முழு பரந்த பிரபஞ்சத்தையும் உருவாக்கின அதே வல்லமை, உங்களுக்கு அளிக்கப்படுகிறது.

தேவனுடைய வார்த்தை தவறாது

தேவனுடைய வார்த்தையின் இன்னொரு தன்மை ஏசாயா 55:11இல் கூறப்பட்டுள்ளது. தேவனுடைய வார்த்தை தன்னுடைய நோக்கத்தில் ஒரு போதும் தவறாது என்று இவ்வசனம் கூறுகிறது:

> *அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும், அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.*

தேவனுடைய வார்த்தை புறப்பட்டு செல்லும் போது, அது அவர் செய்ய விரும்பும் காரியத்தை நிறைவேற்றும். அவர் என்ன நோக்கத்திற்காக அதை அனுப்புகிறாரோ அதில் வெற்றி பெறுகிறது. அப்படியானால் நீங்கள் தேவனுடைய வார்த்தையை முழுமையாக சார்ந்துக்கொள்ளலாம். உண்மையைச் சொன்னால், தான் அனுப்பப்பட்ட காரியத்தை நிச்சயம் நிறைவேற்றும் என்பதற்கு எழுத்தில் உறுதியளிக்கப்பட்டிருக்கிறது என்று நாம் சொல்லலாம். ஒரு கடையில் ஏதேனும் கருவிகளை நீங்கள் வாங்கினால் நீங்கள் வாங்கின பொருளுக்கு நிச்சயமாக உற்பத்தியாளர் ஒரு எழுதப்பட்ட உத்திரவாதத்தை கொடுப்பார். அதேபோல், ஏசாயா 55:11, தேவனுடைய எழுதப்பட்ட உத்திரவாதமாக இருக்கிறது. அவர் என்ன சொல்லுகிறாரோ, அதை அவருடைய வார்த்தை அப்படியே நிறைவேற்றும் என்று வாக்களிக்கிறார்.

> **“முழு பிரபஞ்சத்தையும் உருவாக்கிய சிருஷ்டிக்கும் வல்லமையின் பின்னணியில், வார்த்தையும் தேவனுடைய ஆவியும் இணைந்து செயலாற்றுகின்றன”**

யோவான் 6:63ல், பின்வரும் வார்த்தைகளை பேசின போது, இச்சத்தியத்தை புதிய ஏற்பாட்டில் இயேசு உறுதி செய்தார்.

> *“நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது.”*

தேவனுடைய வார்த்தை காற்றில் பறக்கும் வெறும் சத்தங்கள் அல்லது தாளில் உள்ள குறிகள் அல்லவென்று இயேசு கூறினார். இந்த வார்த்தைகளினுள் தேவனுடைய ஆவி மற்றும் ஜீவன் தாமே இருக்கிறதென்று கூறுகிறார்.

எபிரெயர் 4:12ல், இச்சத்தியம் மேலும் உறுதி செய்யப்படுகிறது. தேவனுடைய வார்த்தையை குறித்து இவ்வாக்கியம் இருக்கிறது.

> *“தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.”*

''வல்லமையுள்ளது'' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தையிலிருந்து தான் "சுறு சுறுப்பு" என்ற வார்த்தை ஆங்கிலத்தில் எடுக்கப்பட்டுள்ளது. இது தேவனுடைய வார்த்தையின் தெளிவான சித்திரமாகும். அது ஜீவனுள்ளது, சுறுசுறுப்பாய் கிரியை செய்கிறது, அது ஊடுருவிச் செல்லுகிறது. அது மனித தனித்தன்மையின் எல்லா பகுதிகளையும் எட்டுகிறது. மனது ஆவி, ஆத்துமா மற்றும் மாம்ச சரீரம் தேவனுடைய வார்த்தை எப்போதெல்லாம் பயன்படுத்தப்படுகிறதோ, அது உங்களுக்கு நன்மை செய்யும் என்ற எழுதப்பட்ட உத்திரவாதத்துடன் வருகிறது.

இதுவே தேவன் தமது வார்த்தையை குறித்து உங்களுக்கு அளிக்கும் வாக்குறுதி. அதை என்ன நோக்கத்திற்காக அனுப்பினாரோ, அதை உங்கள் வாழ்வில் நிறைவேற்றும்.

நாம் எவ்விதமாய் மறுமொழி கொடுக்கிறோம்

இதை முழுமையடையச் செய்ய, இதில் நம்முடைய பங்கை நாம் இப்போது கவனிக்கப்போகிறோம். தேவனுடைய வார்த்தை என்னவாய் இருக்கிறது அல்லது உங்களுக்காக என்ன செய்கிறதென்பது மட்டும் முழு சங்கதி அல்ல. இதன் நம்பகத்தன்மை உறுதியானது அது தேவனைப்போலவே மாற்றம் அடையாதது. ஆனால் நம்மில் தேவனுடைய வார்த்தை எவ்வித விளைவை ஏற்படுத்தும் என்பது, நாம் அதற்கு எப்படி மறுமொழி கொடுக்கிறோம் என்பதையே சார்ந்திருக்கிறது.

தேவனுடைய வார்த்தைக்கு நாம் எவ்விதத்தில் மறுமொழி கொடுக்க வேண்டும் என்பதை இப்பகுதியில் நான் விவரித்துச் சொல்ல உள்ளேன். நாம் பெற வேண்டுமென்று தேவன் விரும்புகிற நன்மைகள் மற்றும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள நாம் எவ்வாறு மறுமொழி கொடுக்க வேண்டும்?

1 தெசலோனிக்கேயர் 2:13ல் பவுல் இவ்வார்த்தைகளை எழுதுகிறார்:

> *"ஆகையால், நீங்கள் தேவ வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்ட போது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவவசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்குஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவ வசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது."*

"நம்மில் தேவனுடைய வார்த்தை எவ்வித விளைவை ஏற்படுத்தும் என்பது, நாம் அதற்கு எப்படி மறுமொழி கொடுக்கிறோம் என்பதையே சார்ந்திருக்கிறது"

தேவனுடைய வார்த்தை நம்மிடம் வரும்போது இரண்டு நிபந்தனைகளை நாம் நிறைவேற்ற வேண்டும். முதலாவது, அதை ஏதோ ஒரு மனிதனின் எழுத்து அல்லது மனித செய்தியென்பது போல நடத்தக்கூடாது. மாறாக, இது தேவனிடமிருந்து நேரடியாக வந்த செய்தியென்று அங்கீகரிக்க வேண்டும் . இது தேவனுடைய வார்த்தை - மனிதனுடையது அல்ல.

இரண்டாவதாக, அதை விசுவாசத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் அதை நம்ப வேண்டும். இதை, தேவன் நம்முடன் பேசின வார்த்தையாக நாம் ஏற்றுக் கொள்ளும்போது - நாம் அந்த வார்த்தையை நம்புகிறோம். அப்போது அது நமக்குள் "கிரியை செய்கிறது" என்று பவுல் கூறுகிறார்.

இவ்விரண்டு நிபந்தனைகளை தயவு செய்து மனதில் கொள்ளுங்கள். முதலாவது, அதை தேவனுடைய வார்த்தையாக ஏற்க வேண்டும், மனிதனுடைய செய்தியாக அல்ல. இரண்டாவதாக தேவன் விரும்புவதை உங்களில் நிறைவேற்ற வல்லமையுள்ளதென்று நம்பி, அதை விசுவாசத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பெற்றுக் கொள்வதற்கான நிபந்தனைகள்

இந்த சம்பாஷணைக்கு, யாக்கோபின் நூல், இன்னொரு தத்துவத்தை சேர்க்கிறது தேவனுடைய வார்த்தையின் முழு பலன்களை அடைய, நாம் நிறைவேற்ற வேண்டிய சில நல்லொழுக்க நிபந்தனைகளும் உண்டென்று யாக்கோபு 1:21ல் காண்கிறோம்.

> *"ஆகையால், நீங்கள் எவ்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்."*

"நாட்டப்பட்டது" என்ற வார்த்தையை கவனியுங்கள். நம்மில் வளரக்கூடிய, ஜீவனுள்ள ஒன்றாய் தேவனுடைய வார்த்தை இருக்கிறது. ஆகையால், நீங்கள் அதை பெற்றுக் கொள்வீர்களானால் - அதை உங்கள் இருதயத்திலும், வாழ்விலும் நாட்டுவீர்களானால் அங்கே அது வேர்விட ஆரம்பிக்கும் ஒரு கனி மரம் போல் வளர்ந்து, தேவன் விரும்பும் பலன்களை அது கொண்டு வரும்.

இரண்டு நிபந்தனைகள் இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. முதலாவது எதிர்மறையானது. நாம் எல்லா அசுத்தத்தையும், துர்க்குணத்தையும் (பொல்லாப்பு) களைந்துபோட வேண்டும் அதாவது நம்முடைய வாழ்க்கையை சுத்திகரிக்க வேண்டும். பாவம், கலகம் மற்றும் பொல்லாத குணாதிசயங்களை பற்றிக்கொண்டிருந்து, தேவன் வாக்குத்தத்தம் செய்ததை நிறைவேற்றுவார் என்று எதிர்ப்பார்ப்பது நல்லதல்ல. அது

இன்னும் தேவையா ?

- ஆம், இந்த இலவச இதழில் எனக்கு இன்னும்------பிரதிகள் தேவை.
- தயவு செய்து அடுத்த முறை எனக்கு கூடுதல் பிரதிகள் அனுப்பவும்.
- முதல் முறையாக பெறுகிறேன், இனி தொடர்ந்து எனக்கு அனுப்பவும்

பதிவு செய்க !

- தயவு செய்து டெரிக் பிரின்ஸ் - இந்தியா ஊழியங்களைப் பற்றிய ஊழியத் தகவல்களையும், புதிய புத்தகம் / சி.டி விவரங்களையும் எனக்கு அனுப்பி வைக்கவும்.
- ஈமெயில் மூலமாக அனுப்பவும்.
- கடிதம் மூலமாக அனுப்பவும்.

ISSUE #004

விலாசத்திற்கு பின்புறம் பார்க்கவும்...

நடக்காது.

இரண்டாவதாக, வார்த்தையை நாம் தாழ்மையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். இது ஒரு முக்கியமான நிபந்தனை. நாம் தாழ்மையாய் இருந்தால், கற்றுக் கொள்ளக்கூடியவர்களாய் இருக்கிறோம். நாம் குறும்புக்கார பிள்ளைகளைப் போல், தேவனிடம் பதிலுக்கு பதில் பேசிக் கொண்டு அல்லது அவர் என்ன செய்ய வேண்டும் என்பதை கூறிக்கொண்டு இருப்பதில்லை. மாறாக அவர் நம்மிடம் என்ன சொல்லுகிறாரோ, அதை தாழ்மையாயய் ஏற்றுக்கொள்கிறோம். நாம் தாழ்மையோடு மறுமொழி கொடுக்கும் போது தான் அவருடைய வார்த்தை நம் வாழ்வில் பலன் கொடுக்கும்.

தாழ்மை மற்றும் பயபக்தியுடன் கூடிய பயம்

இப்பகுதியை நாம் நிறைவுக்கு கொண்டு வர, இன்னொரு மகத்தான சத்தியத்தை நான் உங்களுக்கு காண்பிக்க விரும்புகிறேன். தேவனே தம்முடைய மாணவர்களை தேர்ந்தெடுக்கிறார். நீங்கள் தேவனுடைய மாணவர்களில் ஒருவராய் இருக்க விரும்பினால் - தேவனிடமிருந்து கற்றுக்கொள்ளும் நபராய் இருக்க விருப்பமானால் - அவருடைய நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். சங்கீதம் 25:8-9,12,14ல் அந்த நிபந்தனைகள் தெளிவாக கூறப்பட்டுள்ளன.

"கர்த்தர் நல்லவரும் உத்தமருமாயிருக்கிறார்; ஆகையால் பாவிகளுக்கு வழியைத் தெரிவிக்கிறார்.

சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்.

கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ அவனுக்குத் தாம் தெரிந்துகொள்ளும் வழியைப் போதிப்பார்

கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்கு தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்."

சில முக்கியமான நிபந்தனைகளை குறித்து, வல்லமையுள்ள இவ்வசனங்கள் கூறுகின்றன. தேவன் தம்முடைய வழியை நமக்கு போதித்து, தமது உடன்படிக்கையை நாம் புரிந்துக்கொள்ள செய்ய, நாம் எவ்வாறு நம்மையே ஆயத்தம் செய்கிறோம்? நாம் தாழ்மையாய் இருப்பது மட்டுமல்ல, நாம் கர்த்தருக்கு (பயபக்தியுடன்) பயப்பட வேண்டும். தேவனுடைய வார்த்தையை நம்முடைய வாழ்வில் பெற இவ்விரண்டும் தவிர்க்க முடியாத நிபந்தனை கள்.

"நாம் தாழ்மையாய் இருப்பது மட்டுமல்ல, நாம் கர்த்தருக்கு [பயபக்தியுடன்] பயப்பட வேண்டும்"

நம்முடைய வாழ்வில் கிரியை செய்ய தேவன் அனுப்பின வார்த்தை நிறைவேற வேண்டுமானால், தாழ்மையும் பயபக்தியுடன் கூடிய பயமும் நம்மில் இருக்க வேண்டும். தேவனுடைய மகிமையான இரகசியங்களுக்குள் நாம் நடத்தப்பட வேண்டுமானால் - அவர் தமது ஆச்சரியமான நினைவுகளையும் நோக்கங்களையும் நம்முடன் பகிர்ந்துகொள்ள வேண்டுமானால் - இந்த நிபந்தனை களை நாம் நிறைவேற்ற வேண்டும்.

அநேக மக்கள் இருக்கிறார்கள் - சிலர் வேதாகம பாடசாலைகளில், கல்லூரிகளில் அல்லது இறையியல் உயர்கல்வி நிலையங்களில் கூட படிப்பவர்கள் - தலையில் அதிக அறிவை வைத்திருக்கிறார்கள். ஆனால் அப்படி மண்டையில் அறிவுள்ளவர்களை தேவன் தம்முடைய மாணவர்களாக ஏற்றுக்கொள்வதில்லை. ஏன்? ஏனென்றால் அவருடைய பண்பு தொடர்பான நிபந்தனைகளை அவர்கள் நிறைவேற்றினதே இல்லை. அந்த நிபந்தனைகள் என்ன? தாழ்மையாய் இருப்பதும், தேவன் பேரில் பயபக்தியுடன் கூடிய பயமும், மரியாதையும் உடையவர்களாக இருப்பதே.

இப்போது நான் உங்களுக்கு முன் ஒரு சவாலை வைக்க விரும்புகிறேன். ஒரு நேரடி கேள்வி கேட்க ஆசைப்படுகிறேன். இந்த நொடியில், தேவனுடைய வார்த்தையைக் குறித்து இருக்க வேண்டிய மனநிலையை சொந்தப்படுத்த நீங்கள் முடிவு செய்வீர்களா?

இது உங்கள் விருப்பமாய் இருந்து, நீங்கள் இந்த அர்ப்பணிப்பை செய்ய ஆயத்தமாய் இருந்தால், பின்வரும் ஜெபத்தை செய்து, இதை உறுதி செய்ய உங்களை ஊக்குவிக்கிறேன்.

தேவனே, உம் வார்த்தை என்னில் நாட்டப்பட நான் வாஞ்சிக்கிறேன். என்னில் நீர் விரும்பும் எல்லாவற்றையும் உம் வார்த்தை நிறைவேற்றிட விரும்புகிறேன். இந்நொடியில் உமக்குமுன் தாழ்மை மற்றும் பயபக்தியுடன் கூடிய பயத்தோடும் என்னை தாழ்த்தி, ஜீவனும், வல்லமையுமுள்ள உமது வார்த்தையை எனது ஆவியின் ஆழங்களில் பெற்றுக் கொள்ளுகிறேன். ஆமென்.

உங்கள் விபரம்

பெயர் ....

விலாசம்: ....

....

தொலைபேசி: .... பின்கோடு: ....

இமெயில்: ....

இந்த இதழ் முற்றிலும் இலவசமானது. ஆனால் செலவுகளை சந்திக்க நீங்கள் உதவலாம்.

நன்கொடை ₹

Derek Prince
Ministries - India
Contact us
www.derekprince.in
admin@derekprince.in
Ph 9585538205
1-C EVR Road,
3rd Floor,(Opp.
Chinthamani Mall),
Puthur, Trichy - 620017

DEREK PRINCE MINISTRIES - INDIA

www.derekprince.in